Adda247
GET IT ON Google Play

பகுதி-அ – தமிழ் தகுதித் தேர்வு

Part-A – Tamil Eligibility Test

வினாக்கள் : 1–100 மொத்த மதிப்பெண்கள் : 150

Questions : 1–100 Total Marks : 150

1. சொல்லின் இறுதியில் இடம் பெறும் வினா எழுத்துகள் ________.

   (A) எ, யா
   (B) ஆ, ஓ
   (C) ஏ, எ
   (D) ஆ, யா
   (E) விடை தெரியவில்லை

2. அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்டும் சுட்டெழுத்தைக் கண்டறிக.

   (A) அ
   (B) இ
   (C) ஐ
   (D) உ
   (E) விடை தெரியவில்லை

3. இனவெழுத்துகள் இடம் பெறும் சொற்களைத் தேர்க.

   வஞ்சம், பக்கம், மண்டபம், கம்பளம், தக்காளி, பட்டு

   (A) மண்டபம், வஞ்சம், கம்பளம்
   (B) பக்கம், தக்காளி, பட்டு
   (C) பட்டு, கம்பளம், வஞ்சம்
   (D) தக்காளி, மண்டபம், வஞ்சம்
   (E) விடை தெரியவில்லை

4. பொருள் வேறுபாடு அறிந்து சரியான தொடரை எழுதுக.

   (A) மாணவர்களின் உனர்வுகளுக்கு மதிப்பளித்து மணதாரப் பாராட்ட வேண்டும்.
   (B) மானவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பழித்து மனதாரப் பாராட்ட வேண்டும்.
   (C) மாணவர்களின் உனர்வுகளுக்கு மதிப்பலித்து மனதாரப் பாராட்ட வேண்டும்.
   (D) மாணவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மனதாரப் பாராட்ட வேண்டும்.
   (E) விடை தெரியவில்லை

Test
Prime
By Adda247

ALL EXAMS, ONE SUBSCRIPTION

Test. Analyze. Improve. Repeat.

Don't just prepare. Perform.

Test Prime – built only for mock tests.

Adda247 Test Prime
Adda Education • Education
Installed
Rating | Editors' choice | New
Mocks for Every Exam
Test. Analyze. Improve. Repeat.
All India Rankings

1,50,000+ Mock Tests
25,000+ Previous Year Papers
800+ Exam Covered
500% Refund on Selection

5 lakh+ Free Quizzes
Daily Free PDFs
Top Alerts Stay Updated

WHY TEST PRIME?

- Multilingual
- Detailed Solution
- Strong and Weak Areas
- All India Rankings

Safe & Reliable
Trusted by Lakhs of Aspirants
Your Success, Our Mission

DOWNLOAD TEST PRIME

Your Success Partner!

GET IT ON Google Play
Download on the App Store

Test Prime
SUCCESS GALLERY!
MEET THE ACHIEVERS
Shreya, SBI PO
Sahil, SBI PO
Srijita, SBI PO
Vikram, IBPS PO
Neeti, IBPS PO
Arya, IBPS PO
Hasan, SSC CGL
Palak, SSC CGL
Priti, UP TGT
Aniket, Bihar Stet
Shaurya, NTPC
Sarita, CTET
Gourav, NTPC
Sanni, NTPC
Abhishek, CTET
Sapna, IBPS Clerk
THEY DID IT. YOU CAN TOO
READ THEIR STORIES !

Adda247 GET IT ON Google Play

5. பொருத்தமான பொருளைத் தேர்வு செய்து எழுதுக:-

மரை, மறை

(A) பறவை, கடல்
(B) மான், வேதம்
(C) பனிப்பொழிவு, பணியாற்றுதல்
(D) வாளைமீன், வாழைமரம்
(E) விடை தெரியவில்லை

6. ______________ வந்து கொண்டு இருக்கிறார்கள்.

(A) அவர்கள்
(B) அவைகள்
(C) அவை
(D) அது
(E) விடை தெரியவில்லை

7. மாட ஒள்ளெரி – என்னும் சொல்லின் பொருளைத் தெரிவு செய்க.

(A) நாவாய் ஓட்டுபவன்
(B) பாடல் விளக்கம்
(C) கலங்கரை விளக்கம்
(D) புலால் நாற்றம்
(E) விடை தெரியவில்லை

8. பேச்சு வழக்கு சொற்களுக்கு இணையான எழுத்து வழக்குச் சொற்களை தெரி செய்க.

“வெஞ்சனம் இல்லாமல் சாப்பிட முடியாது”

(A) “குழம்பு இல்லாமல் சாப்பிட முடியாது”
(B) “தயிர் இல்லாமல் சாப்பிட முடியாது”
(C) “மோர் இல்லாமல் சாப்பிட முடியாது”
(D) “பொரியல் இல்லாமல் சாப்பிட முடியாது”
(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

9. சரியான வினைமுடிவைக் கண்டறிக.

(A) கமலா கத்தினான்
(B) கமலா கத்தினது
(C) கமலா கத்தினாள்
(D) கமலா கத்தின
(E) விடை தெரியவில்லை

10. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அஃறிணை என்பது ________

(A) பறவைகள், விலங்கினங்கள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள்
(B) பறவைகள், மக்கள்
(C) பறவைகள், விலங்குகள், தேவர்கள்
(D) மக்கள், தேவர், நரகர்
(E) விடை தெரியவில்லை

11. சரியான திணையைக் கண்டறிக.

(A) அப்பா வயலில் உழுதார்
(B) அம்மா சமைத்தது
(C) நாய் கூட்டமாக வந்தார்கள்
(D) இறைவன் காட்சி கொடுத்தது
(E) விடை தெரியவில்லை

Adda247

12. தொடரில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

பகைவர் நீவீர் அல்லர்.

(A) பகைவர் நீவிர் அன்று
(B) பகைவர் நீவிர் அல்லை
(C) பகைவர் நீவீர் அல்லீர்
(D) பகைவர் நீவிர் அல்லன்
(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

13. பழமொழியின் பொருளறிந்து சரியான தொடரைத் தேர்ந்தெடு.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்'

(A) தொட்டிலில் ஆடும் பழக்கம் சுடுகாட்டிலும் உண்டு.

(B) தொட்டிலையும் சுடுகாட்டையும் மட்டுப்படுத்த வேண்டில்.

(C) இளமையில் கைக்கொண்ட பழக்கம் மரணம் வரை தொடரும்.

(D) இளமையும் மரணமும் பழக்கமாகிவிடும்.

(E) விடை தெரியவில்லை

14. சரியான பழமொழியினை பொருளறிந்து தேர்ந்தெடு.

(A) ஆற்றிலும் போடு; அளந்தும் போடு.

(B) ஆற்றிலும் வீட்டிலும் அளந்து போடு.

(C) ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.

(D) அளந்து போட்டாலும் ஆற்றில் போடு.

(E) விடை தெரியவில்லை

15. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்வு செய்க.

(A) கிளி கூவும்

(B) மயில் அகவும்

(C) காகம் அலறும்

(D) கூகை பேசும்

(E) விடை தெரியவில்லை

16. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.

(A) போட்டனர்

(B) வேய்ந்தனர்

(C) கட்டினர்

(D) அடித்தனர்

(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்.

ஒரு காலத்தில், தேசிய அளவில் மட்டுமல்ல, உலக அளவிலும் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களைக் கொண்ட மாநிலம் என்கிற பெருமை தமிழ்நாட்டுக்கு இருந்தது. சென்னைப் பல்கலைக்கழகம், பாசி உயிரிகளுக்கான ஆய்வுகளில் (Phycology) முன்னோடியாக இருந்தது. மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், காலச் சுழற்சி உயிரியல் (Chronobiology) மூலக்கூறு உயிரியல், மரபணுவியல் போன்ற துறைகளில் உலகப் புகழ் பெற்றிருந்தது. கோட்பாட்டு இயற்பியல், பொருள் அறிவியலில் முக்கியப் பங்களிப்புகளை, பாரதிதாசன் பல்கலைக்கழகம் செய்துள்ளது. இந்தியாவின் கடற்கரைகள்/உவர் நீரியல் ஆய்வில் அண்ணாமலை பல்கலைக்கழகம் முன்னிலை வகித்தது. இவை தமிழ்நாட்டின் நவீன அறிவியல் மரபைக் கட்டியெழுப்பின.

17. உலக அளவில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களைக் கொண்ட மாநிலம்.

(A) கேரளா
(B) ஆந்திரா
(C) கர்நாடகா
(D) தமிழ்நாடு
(E) விடை தெரியவில்லை

18. பாசி உயிரிகளுக்கான ஆய்வுகளில் முன்னோடியாக இருந்த பல்கலைக்கழகம் கண்டறிக.

(A) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
(B) பாரதியார் பல்கலைக்கழகம்
(C) பாரதிதாசன் பல்கலைக்கழகம்
(D) சென்னைப் பல்கலைக்கழகம்
(E) விடை தெரியவில்லை

Adda247

Adda247
GET IT ON Google Play

19. மரபணுவியலில் உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகம்.

(A) மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம்

(B) பாரதியார் பல்கலைக்கழகம்

(C) சென்னைப் பல்கலைக்கழகம்

(D) அண்ணா பல்கலைக்கழகம்

(E) விடை தெரியவில்லை

20. பாரதிதாசன் பல்கலைக்கழகம் எத்துறையில் முக்கியப் பங்களிப்புகளை அளித்துள்ளது?

(A) பொருள் அறிவியல்

(B) மூலக்கூறு உயிரியல்

(C) காலச்சுழற்சி உயிரியல்

(D) பாசி உயிரியல்

(E) விடை தெரியவில்லை

21. இந்தியாவின் கடற்கரைகள்/உவர் நீரியல் ஆய்வில் முன்னிலை வகித்த பல்கலைக்கழகம் கண்டறிக.

(A) அண்ணாமலை பல்கலைக்கழகம்

(B) அண்ணா பல்கலைக்கழகம்

(C) பாரதியார் பல்கலைக்கழகம்

(D) சென்னைப் பல்கலைக்கழகம்

(E) விடை தெரியவில்லை

Adda247
GET IT ON Google Play

22. Aesthetics – இணையான தமிழ்ச் சொல் தருக.

(A) அழகியல்
(B) நேர்மையியல்
(C) பழமையியல்
(D) உலகியல்
(E) விடை தெரியவில்லை

23. 'கலால்' என்ற சொல் எம்மொழிக்குரியது?

(A) ஹிந்தி
(B) போர்த்துக்கீசியம்
(C) அரபு
(D) தெலுங்கு
(E) விடை தெரியவில்லை

24. சரியான இணையை கண்டறிக.

(A) Folder – கோப்பு
(B) Mercy – மனித நேயம்
(C) Pendrive – விரலி
(D) Social Worker – தன்னார்வலர்
(E) விடை தெரியவில்லை

25. ஆங்கிலச் சொல்லுக்கான மொழிபெயர்ப்பு.

CHEMICAL TECHNOLOGY

(A) மீ நுண்தொழில்நுட்பம்
(B) உயிரி தொழில் நுட்பம்
(C) வேதியியல் தொழில் நுட்பம்
(D) உயிரியல் தொழில் நுட்பம்
(E) விடை தெரியவில்லை

Adda247

Adda247
GET IT ON Google Play

26. பின்வரும் தொடரிலுள்ள வினைச்சொல்லைக் கண்டுபிடிக்கவும்.

நாள்தோறும் திருக்குறளைப் படி

(A) படி
(B) நாள்தோறும்
(C) திருக்குறள்
(D) குறள்
(E) விடை தெரியவில்லை

27. பின்வருவனவற்றுள் வினைச்சொல்லைக் கண்டறிக.

(A) படித்தாள்
(B) ஐ
(C) மற்று
(D) கு
(E) விடை தெரியவில்லை

28. ஒற்றுப்பிழை இல்லாதச் சொல்லைத் தெரிவு செய்க.

(A) நிலாச்சோறு
(B) நிலா சோறு
(C) நிளா சோறு
(D) நில சோறு
(E) விடை தெரியவில்லை

29. தொடரில் உள்ள எழுத்துப் பிழையைத் திருத்துக.

உறிய நேரத்தில் விலித்தெழுவேன்.

(A) உரிய நேறத்தில் விலித்தெலுவேன்.
(B) உறிய நேரத்தில் விழித்தெலுவேன்.
(C) உரிய நேரத்தில் விளித்தெலுவேன்.
(D) உரிய நேரத்தில் விழித்தெழுவேன்.
(E) விடை தெரியவில்லை

Adda247

Adda247
GET IT ON Google Play

30. பொருள் வேறுபாடு அறிக.

வானம் – வாணம்

(A) வெடி – ஆகாயம்
(B) ஆகாயம் – மறுத்தல்
(C) ஆகாயம் – வெடி
(D) காடு – வெடி
(E) விடை தெரியவில்லை

31. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க.

விலை – விளை – விழை

(A) உண்டாக்குதல், பொருளின் மதிப்பு, வெருப்பு
(B) பொருளின் மதிப்பு, உண்டாக்குதல், விரும்பு
(C) விரும்பு, பொருளின் மதிப்பு, உண்டாக்குதல்
(D) பொருளின் மதிப்பு, விரும்பு, உண்டாக்குதல்
(E) விடை தெரியவில்லை

32. குறில், நெடில் – வேறுபாடு அறிக.

கொடு – கோடு

(A) படுத்தல் – ஓடுதல்
(B) கொடுத்தல் – வளைவு
(C) நடித்தல் – பாடுதல்
(D) அளித்தல் – மறுத்தல்
(E) விடை தெரியவில்லை

33. மரபுப் பிழைகள்.

(பறி) – என்ற வினை மரபுச் சொல்லுக்குரிய சரியான விடையைத் தேர்க.

(A) பூக்கள்
(B) இலை
(C) ஆநிரை
(D) நிலவு
(E) விடை தெரியவில்லை

Adda247

Adda247
GET IT ON Google Play

34. மொழி – இச்சொல்லுக்கு சரியான இருபொருள் தேர்க.

(A) மனம் – விரும்புதல்

(B) மழலை பேச்சுமொழி – தமிழ்மொழி

(C) தமிழ்மொழி – வானம்

(D) பேச்சுமொழி – கடல்

(E) விடை தெரியவில்லை

35. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) அன்பு, இலை, ஒழுக்கம், ஊழ்

(B) இலை, ஊழ், அன்பு, ஒழுக்கம்

(C) அன்பு, ஊழ், இலை, ஒழுக்கம்

(D) அன்பு, இலை, ஊழ், ஒழுக்கம்

(E) விடை தெரியவில்லை

36. பொருந்தாச் சொல்லைத் தேர்க.

(A) கோடு

(B) பரவை

(C) குளம்

(D) ஆறு

(E) விடை தெரியவில்லை

37. மிகுதி – என்ற பொருள் தரும் உரிச்சொற்கள் ________.

(A) தவ – மணம்

(B) மணம் – மிகுதி

(C) உறு – தவ

(D) கடி – தவ

(E) விடை தெரியவில்லை

38. ஓரெழுத்து ஒரு மொழியின் பொருளைத் தருக.

ஏ

(A) கடவுள்

(B) உண்

(C) அம்பு

(D) மதில்

(E) விடை தெரியவில்லை

Adda247
GET IT ON Google Play

39. பிறவினைச் சொல்லைக் கண்டறிக.

(A) படித்தான்
(B) படிப்பித்தான்
(C) படிக்கிறான்
(D) படிப்பான்
(E) விடை தெரியவில்லை

40. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் – இது எவ்வகை வினை?

(A) தன்வினை
(B) செய்வினை
(C) பிறவினை
(D) செயப்பாட்டு வினை
(E) விடை தெரியவில்லை

41. தொகாநிலைத் தொடரில் அமைந்த தொடர் எது?

(A) சென்றனர் வீரர்
(B) பனைமரம்
(C) இரவுபகல்
(D) பொற்றொடி வந்தாள்
(E) விடை தெரியவில்லை

42. கலைச்சொல்லின் பொருளை தெரிவு செய்க.

'Folk healer'

(A) ஊரக வீரர்கள்
(B) ஊரக மருத்துவர்
(C) ஊரகக் குழு
(D) ஊரகப் பழக்கம்
(E) விடை தெரியவில்லை

43. கலைச்சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல்.

DIGITAL

(A) எண்மம்
(B) தொன்மம்
(C) உருவம்
(D) சட்டகம்
(E) விடை தெரியவில்லை

Adda247

Adda247 GET IT ON Google Play

44. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடு.

(A) தென்றல் காற்று சுழன்றது
(B) தென்றல் காற்று அடித்தது
(C) தென்றல் காற்று வீசியது
(D) தென்றல் காற்று குளிர்வித்தது
(E) விடை தெரியவில்லை

45. உவமைத் தொடர் உணர்த்தும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

'பசு மரத்து ஆணி போல'

(A) எதிர்பாரா நிகழ்வு
(B) பயனற்ற செயல்
(C) எளிதில் மனத்தில் பதிதல்
(D) எளிதில் மனத்தில் பதியாமை
(E) விடை தெரியவில்லை

46. கீழ்க்கண்ட உவமைத் தொடருக்கான பொருளைத் தெரிவு செய்க.

'சிலைமேல் எழுத்துப் போல'

(A) ஊக்கமுடைமை
(B) அழியாமை
(C) அறனுடைமை
(D) நாவன்மை
(E) விடை தெரியவில்லை

47. தொடருக்குப் பொருத்தமான உவமையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அப்துல் கலாமின் புகழ் ____________ உலகெங்கும் பரவியது.

(A) குன்றின் மேலிட்ட விளக்கு போல
(B) குடத்துள் இட்ட விளக்கு போல
(C) குடத்து மேல் இட்ட விளக்கு போல
(D) கிணற்றுத் தவளை போல
(E) விடை தெரியவில்லை

Adda247
GET IT ON Google Play

48. 'திரிகடுகம்' என்ற நூலின் ஆசிரியர் ________.

(A) காரியாசான்
(B) நல்லாதனார்
(C) கம்பர்
(D) காக்கைப்பாடினியார்
(E) விடை தெரியவில்லை

49. 'அறவுரைக் கோவை' என வழங்கப்படும் நூல் ________.

(A) திரிகடுகம்
(B) ஆசாரக்கோவை
(C) திருக்குறள்
(D) முதுமொழிக்காஞ்சி
(E) விடை தெரியவில்லை

50. பிரித்தெழுதுக.

தீதுண்டோ

(A) தீது + துண்டோ
(B) தீமை + உண்டோ
(C) தீது + உண்டோ
(D) தீத் + உண்டோ
(E) விடை தெரியவில்லை

Adda247

51. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்

புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

மேற்கண்ட குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியை எடுத்தெழுதுக.

(A) இல்பொருள் உவமை அணி
(B) உவமை அணி
(C) எடுத்துக்காட்டு உவமை அணி
(D) உருவக அணி
(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

52. பின்வருவனவற்றுள் வினைச்சொல்லைக் கண்டறிக.

(A) செல்க
(B) ஓடு
(C) வாழ்க
(D) வாழிய
(E) விடை தெரியவில்லை

53. எதிர்ச்சொல்லைக் கண்டறிக.

வேட்கை

(A) விருப்பம்
(B) கோபம்
(C) வெறுப்பு
(D) துணிவு
(E) விடை தெரியவில்லை

54. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை எடுத்தெழுதுக.

WWW.SERVER

(A) இணைய விரிவு வலை
(B) இணை வசதி வலை
(C) வையக வலை
(D) வையக விரிவு வலை
(E) விடை தெரியவில்லை

55. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடு.

சந்தோஷம்

(A) நிறைவு
(B) ஊக்கம்
(C) மகிழ்ச்சி
(D) நிம்மதி
(E) விடை தெரியவில்லை

Adda247

56. அழகிய மயில் – எவ்வகைப் பெயரெச்சம்?

(A) தெரிநிலைப் பெயரெச்சம்
(B) குறிப்புப் பெயரெச்சம்
(C) இறந்தகாலப் பெயரெச்சம்
(D) எதிர்காலப் பெயரெச்சம்
(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

57. சந்திப் பிழையற்ற தொடர் எது?

(A) காமராசரை கல்விக் கண் திறந்தவர் என மனதாரப் பாராட்டியவர் தந்தை பெரியார்

(B) காமராசரைக் கல்விக் கண் திறந்தவர் என மனதாரப் பாராட்டியவர் தந்தை பெரியார்

(C) காமராசரைக் கல்வி கண் திறந்தவர் என மனதார பாராட்டியவர் தந்தை பெரியார்

(D) காமராசரை கல்வி கண் திறந்தவர் என மனதாரப் பாராட்டியவர் தந்தை பெரியார்

(E) விடை தெரியவில்லை

58. இவை + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.

(A) இவைஎல்லாம்

(B) இவையெல்லாம்

(C) இதுயெல்லாம்

(D) இவயெல்லாம்

(E) விடை தெரியவில்லை

59. 'உயர்வடைவோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

(A) உயர் + வடைவோம்

(B) உயர் + அடைவோம்

(C) உயர்வு + வடைவோம்

(D) உயர்வு + அடைவோம்

(E) விடை தெரியவில்லை

60. ஓர் எழுத்து ஒரு மொழியின் பொருள் தருக.

தூ

(A) அன்பு

(B) இழிவு

(C) இளமை

(D) தூய்மை

(E) விடை தெரியவில்லை

Adda247

GET IT ON Google Play

61. 'ஊக்கம்' என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.

(A) தெளிவு
(B) சோர்வு
(C) பொய்மை
(D) விலகு
(E) விடை தெரியவில்லை

62. வினாக்குறி அமையும் தொடரினைத் தெரிவு செய்.

(A) நீ வருவாயா
(B) பாம்பு பாம்பு
(C) அறம் பொருள் இன்பம்
(D) மல்லிகை வந்தாள்
(E) விடை தெரியவில்லை

63. சரியான வியப்புக்குறிகள் இடப்பட்ட தொடரைக் கண்டறிக.

அரைமணி நேரத்துக்குப் பின் மீன்பிடிப் படகு விளக்குகள் தென்பட்டன கரை கரை கரை

(A) அரைமணி நேரத்துக்குப் பின் மீன்பிடிப் படகு விளக்குகள் தென்பட்டன. கரை! கரை! கரை!
(B) அரைமணி நேரத்துக்குப் பின்! மீன்பிடிப் படகு விளக்குகள்! தென்பட்டன. கரை, கரை, கரை!
(C) அரைமணி நேரத்துக்குப் பின் மீன்பிடிப் படகு விளக்குகள்! தென்பட்டன. கரை, கரை, கரை!
(D) அரைமணி நேரத்துக்குப் பின்! மீன்பிடிப் படகு விளக்குகள் தென்பட்டன! கரை, கரை, கரை!
(E) விடை தெரியவில்லை

64. சிறுதலைப்பு, நூற்பகுதி எண் முதலிய விவரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரும்போது எவ்வகை நிறுத்தற்குறி இடுதல் வேண்டும்?

(A) காற்புள்ளி
(B) முக்காற்புள்ளி
(C) அரைப்புள்ளி
(D) முற்றுப்புள்ளி
(E) விடை தெரியவில்லை

↓↓

Adda247 GET IT ON Google Play

65. கலைச்சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல்.

ANCHOR

(A) தொகுப்பாளர்
(B) ஓவியர்
(C) வடிவமைப்பாளர்
(D) ஆசிரியர்
(E) விடை தெரியவில்லை

66. 'BIOTECHNOLOGY' – என்பதன் கலைச்சொல்.

(A) புறஊதாக் கதிர்கள்
(B) அகச்சிவப்புக் கதிர்கள்
(C) உயிரித் தொழில்நுட்பம்
(D) விண்வெளித் தொழில்நுட்பம்
(E) விடை தெரியவில்லை

67. 'TORNADO' – என்பதற்குச் சரியான கலைச்சொல்.

(A) பெருமழை
(B) காற்றின் வேகம்
(C) சூறாவளி
(D) மண்ணரிப்பு
(E) விடை தெரியவில்லை

68. Immigration என்பதன் சட்டவியல் தொடர்பான கலைச்சொல் காண்க.

(A) குடியேற்றம்
(B) உடனடியாக
(C) வெளிநாட்டில் இருந்து குடியேறியவர்
(D) ஒழுக்கக்கேடான
(E) விடை தெரியவில்லை

69. கலைச்சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்.

REVENUE

(A) வருவாய்
(B) நாவாய்
(C) பொறுப்பு
(D) தனித்துவம்
(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

70. 'தொன்னூல் விளக்கம்' என்ற இலக்கண நூலை இயற்றியவர் யார்?

(A) ஜி.யு. போப்
(B) வீரமாமுனிவர்
(C) ரா.பி. சேதுப்பிள்ளை
(D) தாராபாரதி
(E) விடை தெரியவில்லை

75.

71. திரு.வி.க அவர்களின் மொழிநடை 'மலை' எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என்று பாராட்டுபவர் யார்?

(A) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
(B) தாராபாரதி
(C) முடியரசன்
(D) வீரமாமுனிவர்
(E) விடை தெரியவில்லை

72. திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழிகளை விட ———— ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.

(A) புதுப்பித்துக் கொள்ளும்
(B) ஒப்பியல்
(C) சொல்வள
(D) கல்வெட்டு
(E) விடை தெரியவில்லை

73. இங்கிலாந்து நாட்டு மகாராணியார் விக்டோரியா, காலையில் கண்விழித்ததும் முதலில் படித்த நூல் ————.

(A) பாரதியார் கவிதைகள்
(B) திருக்குறள்
(C) மூதுரை
(D) மகாபாரதம்
(E) விடை தெரியவில்லை

74. உலகம் தோன்றியபோதே தோன்றிய தமிழை, அதன் தொன்மையைக் கருதி 'என்றுமுள தென்தமிழ்' என்பவர் யார்?

(A) பாரதியார்
(B) கம்பர்
(C) பாரதிதாசன்
(D) கால்டுவெல்
(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

75. குறட்பாவின் அடுத்த அடியை நிறைவு செய்யும் வகையில் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்தெழுதுக.

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு

________.

(A) மாடல்ல எவற்றை யவை

(B) மாடல்ல மற்றை யவை

(C) மாடல்ல மற்றை யாவை

(D) மாடல்ல அவற்றை யவை

(E) விடை தெரியவில்லை

76. 'என்பு தோல் போர்த்த உடம்பு' - யாருக்கு? வள்ளுவர் வழி விடை தருக.

(A) ஒழுக்கமில்லாதவர்க்கு

(B) கல்லாதவர்க்கு

(C) அன்பிலாதவர்க்கு

(D) அன்புடையவர்க்கு

(E) விடை தெரியவில்லை

Adda247

77. "அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்

பேணித் தமராக் கொளல்"

மேற்கண்ட குறட்பாவின்படி, யாரைத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும்?

(A) பகைவர்

(B) சிறியோர்

(C) செல்வந்தர்

(D) பெரியோர்

(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

78. 'படி' என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைக் குறிப்பிடுக.
(A) படித்தார்
(B) படிக்கும்
(C) படித்தவர்
(D) படித்த
(E) விடை தெரியவில்லை

79. 'படி' என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தைத் தேர்ந்தெடு.
(A) படித்து
(B) படித்த
(C) படிக்கின்ற
(D) படித்தான்
(E) விடை தெரியவில்லை

80. "கேள்" என்ற வேர்ச்சொல்லுக்கு உரிய வினைமுற்று தருக.
(A) கேட்டல்
(B) கேட்ட
(C) கேட்டார்
(D) கேட்டு
(E) விடை தெரியவில்லை

81. "வருக" – வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.
(A) வரு
(B) வா
(C) வந்து
(D) வருக
(E) விடை தெரியவில்லை

Adda247

82. ஒருமைச் சொற்களைப் பன்மையாக மாற்றுக.
யானையின் கண் சிறியது
(A) யானையின் கண் சிறியன
(B) யானையின் கண்கள் சிறியது
(C) யானையின் கண்கள் சிறியன
(D) யானையின் கண் சிறியவை
(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

83. பெரிய கப்பல்கள் துறைமுகத்தில் கரைக்கு அருகில் வர இயலாது ———— கப்பலில் வரும் பொருள்களைத் தோணிகள் மூலம் கரைக்குக் கொண்டு வந்தனர். கீழ்க்காணும் பொருத்தமான சொல்லைக் கொண்டு வாக்கியம் உருவாக்குக.

(A) அதனால்

(B) ஆகையால்

(C) எனவே

(D) பின்பு

(E) விடை தெரியவில்லை

84. கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள் – சரியானதைத் தேர்க.

(A) செய்ய

(B) பதிய

(C) வனைய

(D) போட

(E) விடை தெரியவில்லை

85. பிழை திருத்துக (ஒரு – ஓர்).

ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(A) ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(B) ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஓர் நாள்

(C) ஒரு இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒரு நாள்

(D) ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஓர் நாள்

(E) விடை தெரியவில்லை

Adda247

86. ஊர்ப்பெயரின் மரூஉவில் சரியானதைத் தேர்க.

(A) கும்பை – கும்பக்கோணம்

(B) கோவை – கோயம்புத்தூர்

(C) மண்டலம் – உதகைமண்டலம்

(D) பட்டினம் – நாகப்பட்டினம்

(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

87. பொருத்துக :

(a)	சுற்றறிக்கை	1.	Social charter
(b)	வேலைவாய்ப்புக் கடிதம்	2.	Open letter
(c)	சமூகச் சாசனம்	3.	Circular
(d)	திறந்த மடல்	4.	Employment letter

	(a)	(b)	(c)	(d)
(A)	3	1	4	2
(B)	3	4	2	1
(C)	3	4	1	2
(D)	3	1	2	4

(E) விடை தெரியவில்லை

88. எந்த நெறியைப் பரப்புவதைத் தம் வாழ்நாள் கடமையாக செய்தார் குன்றக்குடி அடிகளார்?

(A) காப்பியம்
(B) புதினம்
(C) திருக்குறள்
(D) காவியம்
(E) விடை தெரியவில்லை

89. டி.கே.சி என அழைக்கப்படும் டி.கே. சிதம்பரநாதர் இப்படிச் சிறப்பிக்கப்பட்டார் ____________.

(A) தத்துவமணி
(B) வாசகமணி
(C) கவிமணி
(D) ரசிகமணி
(E) விடை தெரியவில்லை

90. யார் மீது கொண்ட பற்றினால் பாரதிதாசன் எனத் தன் பெயரை மாற்றி அமைத்துக் கொண்டார்?

(A) பெற்றோர்
(B) முடியரசன்
(C) பாரதியார்
(D) கண்ணதாசன்
(E) விடை தெரியவில்லை

Adda247 GET IT ON Google Play

91. முகவரியில் இறுதிவரி தவிர்த்த பிற இடங்களில் இட வேண்டியப் புள்ளி.

(A) அரைப்புள்ளி
(B) முற்றுப்புள்ளி
(C) காற்புள்ளி
(D) முக்காற்புள்ளி
(E) விடை தெரியவில்லை

92. சரியான வினைமரபைத் தேர்ந்தெடு.

(A) பழம் தின்
(B) பழம் உண்
(C) பழம் சாப்பிடு
(D) பழம் கடி
(E) விடை தெரியவில்லை

93. கீழ்க்கண்ட தாவர உறுப்பின் பெயரைப் பொருத்துக.

மூங்கில் ________

(A) ஓலை
(B) இலை
(C) மடல்
(D) தாள்
(E) விடை தெரியவில்லை

94. 'குதிரை' என்னும் சொல்லுக்குரிய பால் எது?

(A) பெண்பால்
(B) பலவின்பால்
(C) பலர்பால்
(D) ஒன்றன்பால்
(E) விடை தெரியவில்லை

95. பொருத்தமானதைத் தேர்ந்தெடு.

பலர்பாலுக்கான எடுத்துக்காட்டு ________

(A) தோழி
(B) தோழன்
(C) மாணவர்கள்
(D) ஆடுகள்
(E) விடை தெரியவில்லை

Test
Prime
By Adda247
PREVIOUS YEAR
PAPERS PDF
PRACTICE MORE, SCORE HIGHER!
Free
25,000+
PDF's
PDF
High-Quality | Exam-Wise | Updated Regularly
ATTEMPT AS
MOCK
Turn PDFs into real exam experience.
Analyze. Improve. Succeed.
Previous Year Papers PDF
Search
Banking
JAIIB & CAIIB
SSC
Railways
April 2026
11th Apr (Shift: 1)
HINDI
RBI Assistant Pre 2026 Mem...
100 Ques
60 Mins
DOWNLOAD
ATTEMPT NOW
11th Apr (Shift: 1)
ENGLISH
RBI Assistant Pre 2026 Mem...
100 Ques
60 Mins
DOWNLOAD
ATTEMPT NOW
11th Apr (Shift: 2)
HINDI
RBI Assistant Pre 2026 Mem...
100 Ques
60 Mins
DOWNLOAD
ATTEMPT NOW
11th Apr (Shift: 2)
ENGLISH
RBI Assistant Pre 2026 Mem...
100 Ques
60 Mins
DOWNLOAD
ATTEMPT NOW
February 2026
22nd Feb (Shift: 1)
ENGLISH
BOB Office Assistant MBT (...
Topic-wise & Exam-wise PDFs
Download & Study Offline
Attempt as Mock & Track Score
Smart Analysis & Performance
AVAILABLE IN
Banking
SSC
Railway
Teaching
UGC
Agriculture
Nursing
Bihar
UP
Punjab
WB
Odisha
TN
AP & Telangana
Haryana
DOWNLOAD TEST PRIME

Test Prime
SUCCESS GALLERY!
MEET THE ACHIEVERS
Kunal, RRB JE
Shivam, UPSSSC AGTA
Priya, ANM
KHALILUR, LDA
Manoj , PWD
Atin, JENPAS
Shatarupa, OPSC
Arpita, JENPAS
Shital, SSC JE (Mech)
Nancy, UGC NET
Atul, SSC JE (ELCT)
Rahul, SSC JE (CIVILI)
Anand, SSC JE (ELCT)
Mohan, SSC JE (ELCT)
Saurabh, UGC NET
Ved, SSC JE (Mech)
THEY DID IT. YOU CAN TOO
READ THEIR STORIES !

Adda247
GET IT ON Google Play

96. கலைச்சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்.

CARDIO WALK

(A) ஓடு பாதை
(B) நெஞ்சக நலநடை
(C) நடை மேடை
(D) வழித்தடம்
(E) விடை தெரியவில்லை

97. சரியான கலைச் சொல்லைத் தேர்க.

PHILOSOPHER

(A) நம்பிக்கையாளர்
(B) மெய்யியலாளர்
(C) ஆய்வாளர்
(D) கருத்தாளர்
(E) விடை தெரியவில்லை

98. Marine – என்ற ஆங்கிலச் சொல்லுடன் தொடர்புடைய தமிழ்ச்சொல்.

(A) விமானம்
(B) ஏவுகணை
(C) கப்பல்
(D) செயற்கைக் கோள்
(E) விடை தெரியவில்லை

99. 14.09.2011. G-O-MS-NO-170 பொதுப்பணித்துறை.

பாசனம் – மேட்டூர் அணை – திருச்சி அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் – புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு – வாய்க்கால் பாசனத் திட்டத்தில் எத்தனை நாட்களுக்குத் தண்ணீர் திறந்து விட ஆணை வெளியிடப்பட்டது?

(A) 137
(B) 157
(C) 177
(D) 127
(E) விடை தெரியவில்லை

100. பழமொழிகளின் பொருளை அறிதல்.

நகமும் சதையும் போல

(A) பார்த்து
(B) கவனித்து
(C) சேர்ந்து
(D) இணைந்து
(E) விடை தெரியவில்லை

↓↓